


தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

அக்டோபர் 2024
மரம் 24
கனி 11

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 58
தலைப்பு : கல்லெறிதல் - Stoning
வேத வாசிப்பு : யோவான் 10:31-42

1. அஞ்சனம்,குறிபார்த்தல் கல்லெறிய - லேவி.20:27
2. கர்த்தரை தூஷித்தவனை கல்லெறிய - லேவி.24:4
3. உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை - மத்.23:37

மாத இதழுக்கான
சந்தா செலுத்த மூன்று வழிகள்

**G-Pay & PhonePe - 9443558041**



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**



The Word of Christ
Canara Bank A/c No.094620100552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

*Contact Us: 6379350509*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

**Our TV Program: Six Days of the Week**

***Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV &***

***24 Hours Worldwide Twoc TV Channel***






YouTube : the word of christ

**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 அக்டோபர் -2024 கனி - 11


ஆசிரியருரை

## நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்
## Hold Fast What is Good



பரிசுத்த வேதாகமம்; "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறது (1தெச.5:21). எந்த ஒரு பொருள் வாங்கினாலும் அதை நாம் சோதித்துப்பார்த்து வாங்குகிறோம். நாம் சில காரியங்களைப் பற்றிக்கொள்ளும்போதுகூட அவைகளை சோதித்துப் பார்த்து பற்றிக்கொள்ளவேண்டும். பாவத்தை நாம் சோதித்துப் பார்க்கத் தேவையில்லை. அது நமக்குத் தெரியும் பாவம், பாவமே. அதை நாம் சோதித்துப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. எல்லாவற்றையும் சோதித்துப்பாருங்கள் என்பது தேவையற்றவைகளையல்ல. அவைகளை நாம் சோதித்துப்பார்க்கவேண்டிய அவசியமே இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

நாம் சோதித்துப் பார்க்கவேண்டிய சிலவற்றை வேதாகமம் நமக்குப்போதிக்கிறது; "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்; மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" (1யோவா.4:1-3).

இன்றைக்கு இப்படிப்பட்டவர்கள் அதிகமாக காணப்படுகிறார்கள். அவர்களை நாம் சோதித்து அறியவேண்டும். தேவனைப்பற்றி சொல்லுகிறார்கள், பழைய ஏற்பாட்டு வசனங்களை சொல்லுகிறார்கள் ஆனால் கிறிஸ்துவையும் அவருடைய மேன்மையான உபதேசங்களையும் மறைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஒருவகையில் அந்திகிறிஸ்துவாக இருக்கிறார்கள். தங்கள் வயிற்றுக்காக ஊழியம் செய்கிறார்கள். இன்னும் பலர் பரிசுத்தஆவியைப்பற்றி பேசுவார்கள் ஆனால் இயேசுவையும் அவருடைய பாடுகளையும் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலையும் குறித்து பேசமாட்டார்கள். எப்பொழுது பார்த்தாலும் பரிசுத்தஆவியைப் பெற்றுவிட்டீர்களா? என்ற ஒரு கேள்வியை கேட்டு ஜனங்களை குழப்பத்தில் தள்ளிவிடுவார்கள். இவர்கள் கர்த்தரையும் கர்த்தருடைய மகிமையான வசனங்களையும் விட்டு விட்டு காணாதவைகளில் துணிவாய் நுழைந்து தங்களுடைய சிந்தையில் இருமாப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்கள்

கிறிஸ்துவை மகிமைப்படுத்தாமல் இருக்கிறபடியால் அந்திகிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாயிருக்கிறார்கள்.

முற்பிதாக்களின் காலத்திலும் இப்படிப்பட்டவர்கள் இருந்தார்கள். "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கையை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்" (2பேது.2:1-2).

உலக அளவில் வளர்ச்சியடைந்த சபைகள் மிகவும் பெருமையோடு இருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவாக வேதத்தைப்புரட்டி ஜனங்களை தவறாக வழிநடத்தி, பாவத்தை தண்ணீரைப்போல பருகுகிறார்கள். அவர்களாலே சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. எப்படிவேண்டுமானாலும் வாழலாம். நீ ஒரு கிறிஸ்தவனாயிருந்தால்போதும் என்று சொல்லி ஜனங்களை மோசம்போக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய தவறான போதனையை அநேகர் ஏற்றுக்கொண்டு அதைப்பின்பற்றுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கள்ளப் போதகர்களாக சபைகளில் துணிந்து செயல்படுகிறார்கள். "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 11-13). கள்ளத்தீர்க்க தரிசிகளும், கள்ளப்போதகர்களும் காயீன், பிலேயாம், போன்றவர்களின் போதனையின்படி நடப்பவர்கள். அவர்களுடைய நடக்கைகளை நாம் அறிவோம். காயீன் ஒரு கொலைகாரன், பிலேயாம் கூலிக்காக வஞ்சனை செய்யும்படியாக விரைந்து ஓடினவன், பணஆசையுள்ளவன். இதைப்போல மோசே மற்றும் ஆரோனை எதிர்த்தவர்கள் கோராகு கூட்டத்தார்கள். அவர்களுடைய முடிவு! பூமி அவர்களை விழுங்கிப்போட்டது.

இப்படிப்பட்ட கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் உங்களுக்குள்ளும் இருப்பார்கள். அவர்களை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டு அவர்களுடைய ஐக்கியத்தில் பங்குகொள்ளாதிருக்க வேண்டும். அவர்கள் தவறுசெய்தால் அது அவர்களைத்தானே தண்டிக்கும் என்று நினைத்துவிடக்கூடாது. அவர்களோடு நீங்களும் இசைவாக இருக்கிறபடியால் அது உங்களையும் தண்டிக்கக்கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு காரிருள் வைக்கப்பட்டுள்ளது எனக் காண்கிறோம். அமாவாசை அன்று விளக்குகளும் அணைந்துவிட்டால் நாம் அந்த இருளில் எவ்வளவு கஷ்டப்படுகிறோம்! அதைப்போல பன்மடங்கு காரிருள். எப்படியிருக்கும்? அந்தவிதமான இருளே

அவர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், கள்ளத்தீர்க்கதரிசிகளை அடையாளம் கண்டுகொள்ள நாம் வேதம் சொல்லுகிற ஆலோசனைக்கு செவிகொடுக்கவேண்டும். "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழத்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழத்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2யோவா.10,11).

கிறிஸ்துவினுடைய உபதேசத்தை கொண்டு வராத எந்த ஒரு நபரையும் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அது உறவினர்களாக இருந்தாலும் சரி, அந்நியர்களாக இருந்தாலும் சரி, வெளிநாட்டு மிஷனரிகளாக இருந்தாலும் சரி அவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அப்படி மீறி நாம் ஏற்றுக்கொண்டு அவர்களுக்காக முகஸ்துதி செய்வோமானால் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் நாமும் பங்குள்ளவர்களாகிறோம். தேவன் நம்மை தண்டியாமல் விடார். கள்ளப்போதனை செய்கிறவர்கள்; "கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களா யிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்" (2கொரி.11:13-15).

அப்போஸ்தலர்களே இல்லாத இக்காலக்கட்டங்களில் தங்களை அப்போஸ்தலர்கள் என்று சொல்லி அழைத்துக்கொண்டும், அப்போஸ்தல பட்டங்களை மற்றவர்களும் சூட்டிக்கொண்டு வலம்வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்களாகவும் கபடமுள்ள வேலையாட் களாகவும் இருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்ளுவானே என்ற வசனத்தின்படியாக ஓனாய் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு ஆட்டுமந்தைகளுக்குள் நுழைவதைப்போல இவர்கள் அப்போஸ்தரின் வேஷத்தில் கர்த்தருடைய மந்தையை சேதப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்களை நாம் சோதித்து அறியவேண்டும்.

வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்லப்பட்ட ஏழு சபைகளில் எபேசு சபை இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டுகொண்டது. "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்" அறிந்திருக்கிறேன் என வெளி.2:2 ல் எழுதுப்பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம். நாம் கர்த்தருடைய சபையை சார்ந்தவர்களாக இருப்போமானால் இப்படிப்பட்டவர்களை நாம் சோதித்து அவர்கள் பொய்யர் என்பதை கண்டுகொள்ளவேண்டும்.

சோதித்து அறிந்த பின்பு நாம் நலமானதை பிடித்துக்கொள்ள வேண்டும் என வாசித்தோம். ஆம், நலமானதை எல்லோரும் விரும்புவார்கள். பரலோகராஜ்யம் சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது என மத்.13:47-50 வசனங்களில் படிக்கிறோம். அந்த வலையை

கறையில் இழுத்துவந்து நல்லவைகளை சேர்த்துவிட்டு ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். அந்தப்படியாக நீங்கள் நலமானதை பிடித்துக்கொண்டு சுடர்களைப்போல பிரகாசமாயிருங்கள். நலமானதைப்பிடித்துக்கொண்டதற்கு அடையாளம் நிலைத்திருப்பது. பவுல் தீமோதேயுவுக்கு எழுதும்போது; "நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்" என எழுதுகிறார் (2தீமோ.3;14).

**கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பார்கள்**. நாம் எந்தஅளவு கற்றுக்கொண்டுள்ளோமோ அவைகளில் முதலாவது நிலைத்திருக்கவேண்டும். அதையே வேதம் எதிர்பார்க்கிறது. பவுல் சொல்லும்போது; "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டே னென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்கிறார் (பிலி.3:12-14).

தேவன் நம்மை அழைத்த அழைப்பு மாறதவைகளாகவே இருக்கிறது. அதை நாம் முதலாவது புரிந்துகொண்டு அவைகளைப் பற்றிக்கொண்டு கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்பவேண்டும். ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுவதால் ஒருவருக்கும் பிரயோஜனம் இல்லை. ஆகையால் பவுலைப்போல பரம அழைப்பின் பந்தையப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருங்கள்.

மேலும் "உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள். ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவர்களுக்குக் கொடுப்பேன்"என்றார் (வெளி.2:25-28). எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பற்றிக் கொள்ளும் அனைவருக்கும் நலமான ஆசீர்வாதங்களை ஆண்டவர் வைத்து வைத்திருக்கிறார். ஆகையால் உங்களுக்கு உள்ளதைப் பற்றிக்கொண்டு பெலப்படுங்கள்.

**என்னுடைய வாழ்நாள் வீணாய் போய்விடாதிருக்க நான் என்ன செய்யவேண்டும்?**

"நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை யென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லா மலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்கிறார் பவுல் (பிலி.2:14-16). இவ்விதமாக இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## நாம் ஏன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கிறோம்

### Why We Partake of The Lord`s Supper

*J.C.Choate*

இயேசுவும் அப்போஸ்தலரும் மேல் வீட்டறையில் பஸ்காவில் பங்குகொள்ளும்படி கூடியிருக்கையில் கர்த்தருடைய பந்தியானது இறுதி விருந்தை நினைவுபடுத்துகிறது. பஸ்கா என்பது ஆட்டுக்குட்டியின் இரத்தம் எந்தெந்த வீட்டின் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டிருந்ததோ அதனைக் கண்டு மரணதூதன் கடந்து சென்றதைநினைவுப்படுத்தும்படி கொண்டாடும் ஒரு வருடாந்திரப்பண்டிகையாகும் (யாத்.12). இந்தப்பண்டிகை ஒழிந்துபோனது, ஆனால் புதியஏற்பாட்டின் வருகையினால், கர்த்தருடைய ஜனங்கள் இப்போது கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகின்றனர்.

வேதவாக்கியம், “அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புதுஉடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்” (மத்.26:26-30) என்று கூறுகிறது.

மாற்கு புத்தகத்தில் நாம், “அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக்கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனிநான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்” (மாற்.14:22-26) என்று வாசிக்கிறோம்.

கடைசியாக, லூக்கா இதே விதமாகக் குறிப்பிடுகிறது, “வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி; நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைத் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்'' (லூக்.22:14-20)

கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுவது பற்றிய இந்த மூன்று பதில்களில், நாம் கவனிக்க வேண்டிய அநேகக் காரியங்கள் உள்ளன. முதலாவது, முன்பு குறிப்பிடப்பட்டுள்ளபடி, இயேசு சீஷர்களுக்கு இரவு விருந்திற்கு அறிமுகப்படுத்தும்படி பஸ்காவிருந்தினை ஏற்படுத்துவதற்கு அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அது கைக்கொள்ளப்படுமென ஒரு இரவு விருந்தை அல்லது ஒரு நினைவு விருந்தை பயன்படுத்தினார். அவர், அப்பம் அவருடைய சரீரமாயிருக்கிறது அல்லது அவருடைய சரீரத்துக்கு மாதிரியாயிருக்கிறது என்றும் அது தம்மையும் தம்முடைய பாடுகளையும் நினைவுகூரும்படிக்கு பங்கெடுக்கப்படவேண்டியது என்றும் சொன்னார். பாத்திரம், அதாவது திராட்சப்பழரசம் தம்முடைய இரத்தமாகவும் அதாவது தம்முடைய இரத்தத்திற்கு மாதிரியாயிருக்கிறதென்றும் மனுஷனுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட இரத்தமாயிருக்கிறது என்றும் அந்த இரத்தத்தை நினைவுகூரும்படிக்கு அது பங்குகொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது என்றும் சொன்னார். நிச்சயமாக, இந்த வேதவாக்கியங்களில் அவர் பேசுகின்ற இந்த அப்பமானது, இந்த இராப்போஜனத்தில் பங்குகொண்ட போதிலும்கூட, இது கிறிஸ்துவினுடைய நேரடியான சரீரமாயிராது. பாத்திரமானாலும், அதாவது பழரசம் அல்லது திராட்ச ரசமானாலும், கிறிஸ்துவினுடைய நேரடியான இரத்தமாயிராது. ஆனால் அவைகள் வெறுமனே மாதிரியாக அல்லது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் அவருடைய இரத்தமாக கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளுகிறவர்கள் நினைவுகூருகிற ஒன்றாக இருக்கும்.

இந்த பஸ்காவானது புளிப்பில்லா அப்பமும் திராட்சப் பழரசமும் சேர்ந்தது என குறிப்பிடுகிறதாயிருக்கவேண்டும். கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் பஸ்காவைப் புசித்தபடியினாலும் அதே சமயம் தம்முடைய இராப்போஜனத்தை ஏற்படுத்த அவர் அப்பத்தையும் பாத்திரத்தையும் பயன்படுத்தியபடியினால், இன்னும்கூட கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குகொள்ளுகையில், நாம் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழம் அல்லது திராட்சப்பழ ரசத்தையும் கர்த்தருடைய சரீரத்தையும் கர்த்தருடைய இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு பயன்படுத்துகிறோம். இரண்டாவது, இயேசு அவர்களோடுகூட தேவனுடைய ராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் இந்தப் பஸ்காவைப் புசிப்பதில்லை என்று தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். இது கிறிஸ்து சீக்கிரமாக காட்டிக்கொடுக்கப்படப்போகிறார் என்றும் இவ்வாறாக உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் இரத்தஞ்சிந்தப் போகிறார் என்றும் வெளிப்படுகிறது. அதன்பின் அவர்

அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாள் இரவுகளுக்கு பிறகு கல்லறையிலிருந்து புறப்பட்டு சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில நாட்களுக்குக் காட்சியளித்து அதன்பிற்பாடு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு திரும்பிச்சென்றார். தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டு அங்கிருந்து அது உலகமுழுவதும் பரவும். தயவுகூர்ந்து கவனியுங்கள் ஏற்றவேளையில் சபை ஸ்தாபிக்கப்பட்டபிறகு ''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்.2:42) என வாசிக்கிறோம். அப்பம்பிட்குதல் இங்கே கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வரப்போகிற ராஜ்யம் அல்லது சபையில் சீஷர்கள் பந்தியில் பங்குகொள்கையில் கிறிஸ்து அவர்களோடு இருப்பாரென வாக்குப்பண்ணினார். நிச்சயமாக, அவர் சரீரத்தில் அவர்களோடுகூட இருக்கப்போவதாக பொருள்படுத்தவில்லை, ஆனால் அவர்களோடுகூட இருந்தார் மேலும் அவர் ஆவியில் தம்முடைய பிள்ளைகளோடுகூட இன்றும் இருக்கிறார். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர்கள் தம்முடைய நாமத்தில் கூடுகிறார்களோ அங்கே அவர்களோடுகூட தாம் இருப்பேன் என்று அவர் சொன்னார் (மத்.18:20). மீண்டும், அவர் எப்பொழுதும், அதாவது மரணபரியந்தமும்கூட நம்மோடே இருக்கப் போவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத்.28:20). ஆனபடியினால், சபை நிலைத்திருக்கிறது, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு, அதிலே நிலைத்திருக்கையில், அவர் நம்மோடுகூட இருக்கிறார்.

இப்போது என்னோடுகூட 1கொரிந்தியர்11:23-29-க்குத் திரும்பி, அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளை வாசிப்போம், அவர் சொன்னபோது, ''நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கெண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் **கர்த்தருடைய**, அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், **கர்த்தருடைய** சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்'' என்றார்.

தொடர்ந்து பார்க்கையில், நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய சில காரியங்கள் உள்ளன. முதலாவது, பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிய தகவலை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தியிருக்கிறான்.

**இரண்டாவது** அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படிக்கு அப்பத்திலும், புதிய உடன்படிக்கையை அல்லது கிறிஸ்துவின் சட்டத்தை உறுதிப்படுத்தும்படிக்கு சிந்தப்பட்ட இரத்தமாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படிக்குப் பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டியவர்கள் என அவர் சொன்னார். **மூன்றாவது** அவர்கள் பந்தியில் தொடர்ந்து பங்கெடுக்க வேண்டியவர்களாக அதாவது கிறிஸ்து வரும்வரை அவரது மரணத்தை நினைவுகூரும் வண்ணமாக இருக்கவேண்டுமெனவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எவ்வாறு தொடர்ந்து பங்கெடுப்பது? அப்போஸ்தலர் 20:7-ல் அப்பம் பிட்கும்படி துரோவாவில் காத்திருந்த கிறிஸ்தவர்களோடு பவுல் கூடி வந்ததை நாம் உதாரணமாக பெற்றிருக்கிறோம். எத்தனை முறை வாரத்தின் முதல் நாள் வருகிறது? ஒருவாரத்திற்கு ஒரு முறை அதாவது கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வாரத்தின் முதல் நாளிலே கூடிவரவேண்டியவர்களா யிருந்தார்கள். அவ்வாறே இன்றும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களென்பது உண்மை. நாம் வியாழக்கிழமையில், மாதம் ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, இன்னும் இதுபோன்ற வேறு நாட்களில் கூடிவரும்படியான உரிமை பெற்றிருக்கவில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் கூடிவந்தார்களென அறிவுறுத்தப்படுகிறோம். மேலும் ஒவ்வொருவாரத்திலும் ஒரே ஒரு முதல் நாளே இருந்தபடியால் கிறிஸ்துவை நினைவுகூரும் நோக்கத்திற்காக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி அவர்கள் அந்நாளிலே தான் கூடிவந்தார்கள். நாம் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் இன்னும் அதே காரியம் பின்பற்றப்படவேண்டும்.

தொடர்ச்சியாக **நான்காவது**, கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கையில் நாம் இரட்சிக்கப்படும்படிக்கும் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கும் படிக்கும் கிறிஸ்து ஏற்படுத்திய தியாகத்தை நினைவுகூர சிலுவைக்கு நேராக திரும்புகிறோம். நாம் அப்பத்தைப் பிட்கையில் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளோமென அறிவித்துக் கொண்டும், அதனால் நாம் அவர் எப்போது மீண்டும் வருவார் என்பதையும் அறிவுறுத்திக் கொண்டுமிருக்கிறோம்

**ஐந்தாவதாக:** நாம் இந்தப் பந்தியில் அபாத்திரமாய் பங்கெடுத்தால் நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கவில்லையென்றும் நாம் என்ன செய்கிறோம் என்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லையென்றும் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் தகாதவிதமாக பயன்படுத்திய குற்றமுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்பதை நாம் கண்டிப்பாக நினைவுகூரவேண்டும். இதை இன்னொரு விதத்தில் சொன்னால், கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாக பங்குகொள்வது நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்புவரும்படி

புசிக்கிறோம் குடிக்கிறோம் என்று அர்த்தமாகிறது. ஆனால் கர்த்தருடைய பந்தி நமக்கோ கர்த்தருக்கோ ஏதாவது பொருள்படுத்துமானால் அது நாம் கர்த்தரிடத்தில் கண்டிப்பாக விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றே பொருள்படுத்துகிறது.

மேலும் கடைசியாக, **ஆறாவது** கட்டத்தில், நாம் தேவனுக்கு முன்பாக நம் இருதயமும் ஜீவியமும் நீதியுள்ளதாக இருக்கிறது என்ற நிச்சயமுள்ளவராக இருக்க கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்வதற்கு முன் நம்மை நாமே நிதானித்து பார்க்க உற்சாகப்படுத்தப்படுகிறோம். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோம் என நம்மால் முடிந்த அளவு சிறப்பானதைச் செய்கிறோம் என்று அறியும் போது மட்டும் நாம் அதில் பங்குகொள்ள வேண்டும். நாம் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கி றோமென கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கிறவற்றைச் சார்ந்து நம்முடைய இருதயத்தில் நேர்மையுடன் அறிக்கைசெய்ய முடியாவிட்டால், பிறகு கர்த்தருடைய ஜனங்க ளோடு வாரந்தோறும் அப்பம் பிட்கத் தொடரும்முன் நாம் நம்முடைய பாவங்களுக் காக மனந்திரும்பி நம்மைக் கர்த்தர் மன்னிக்கும்படி கேட்க வேண்டும்.

என்னுடைய நண்பரே; கர்த்தருடைய பந்தியானது கர்த்தருடைய சபையில் அங்கமாயிருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கு மிகவும் முக்கியமானது. இது கிறிஸ்துவை நினைவு கூர்ந்து அவருக்கு உண்மையுள்ளவராய் நிலைத்திருக்க வேண்டும் எனப் பொருள்படுகிறது. இது ஒரு போஜனத்தைப்போல புசிப்பதற்கு அல்லது இதன் நோக்கத்தினை புரிந்துகொள்ளாமல் பங்குகொள்வதற்கு இது வெளித்தோற்றத்திற்கல்ல. இது கிறிஸ்தவனை பெலப்படுத்துவதற்கும் அதே சமயம் கர்த்தருடைய பந்தியின் மூலம் கிறிஸ்துவினிடத்திற்கு மற்றவர்களைத் திருப்புவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்கும் இது கடைபிடிக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு என்னத்தைத் தெரியப்படுத்துகிறது? வாரத்தின் ஒவ்வொருநாளும் கர்த்தருடைய பிள்ளைகளோடு அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டால், நீங்கள் கிறிஸ்தவராய்மாறும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். கிறிஸ்துவை விசுவாசித்து உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதின் மூலமும் உங்களுடைய பாவங்களின் மன்னிப்புகென்று தண்ணீரில் அடக்கம்பண்ணப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதின் மூலமும் (மாற்16:16; அப்.2:38) நீங்கள் கிறிஸ்தவராய் மாறமுடியும். நீங்கள் இதைச் செய்யும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். ஒரு கிறிஸ்தவனாக, கர்த்தருடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தினனாக, நீங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியைப் புசிக்கலாம், நீங்கள் கிறிஸ்தவ ஜீவியம் செய்வதால், இவ்வாறாக கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை உலகத்திற்கு பிரஸ்தாபப்படுத்துங்கள்.

**ஜெபியுங்கள்**



- இம்மாத சென்னை ஊழியங்களுக்காக...
- ஆந்திரா ஊழியங்களுக்காக...
- நம்தேசத்தில் நடைபெறும் கர்த்தருடைய சபையின் ஊழியங்களுக்காக...

ப.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**

**Bible Characters**

**51**



## பரிசுத்த வேதாகமத்தில் மல்கியா
## Malachi In The Holy Bible

1. மல்கியா புத்தகத்தை எழுதினவன்
2. கர்த்தர் இஸ்ரவேலை சிநேகித்தார் - மல்.1:2
3. கர்த்தருடைய பணியைச் செய்கிற ஆசாரியர்கள் - மல்.1:6,7
4. தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை - மல்.1:14
5. உங்கள் பண்டிகைகளின் சாணியையே - மல்.2:3
6. ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க - மல்.2:7
7. (எலியா) யோவான்ஸ்நானனை குறித்த தீர்க்கதரிசனம் - மல்.3:1;4,5
8. (இயேசு) புடமிடுவார் - மல்.3:2,3
9. தேவனை வஞ்சித்தார்கள் - மல்.3:8,9
10. தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் - மல்.3:17,18

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகபுஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறதா?**




**விடை:** ஆம் - (மல்கியா 3:16).

**பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான மல்கியா ஒரு ஞாபக புத்தகத்தை நமக்கு ஞாபகபடுத்தியிருக்கிறார். எனவே கர்த்தருக்கு பயந்து நடந்துகொள்ளுங்கள்! அப்பொழுது கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவீர்கள்!!**

பு.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**
**Bible Characters**

**52**



## பரிசுத்த வேதாகமத்தில் தேவதூதன்
## Angel In The Holy Bible

1. சகரியா தூதனைக் கண்டு கலங்கி, பயமடைந்தான் - லூக்.1:11-13
2. மரியாள் காபிரியேல் தூதனை கண்டாள் - லூக்.1:26-37
3. இயேசுவை ஒரு தூதன் பெலப்படுத்தினான் - லூக்.22:41
4. இரண்டு தூதரைக் கண்ட ஸ்திரீகள் - லூக்.24:1-10
5. பேதுருவை விலாவிலே தட்டி எழுப்பிய தேவதூதன் - அப்.12:7-11
6. பவுலோடு பேசிய தேவ தூதன் - அப்.27:23
7. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை - 2கொ.11:14
8. வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது - கலா.1:8
9. பாவம் செய்த தேவதூதர்களை - 2பேது.2:4
10. யோவானுக்கு, நானும் ஒரு ஊழியக்காரன் -

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***இந்தச் சிறியரில் அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே இருக்கிறார்களா?***

**விடை:** ஆம் - (மத்தேயு 18:10).



இத்துடன் 52 வேதாகம காதாபாத்திரங்கள் நிறைவடைகிறது. முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆதி அப்போஸ்தலர்கள், முதல்நூற்றாண்டு சீஷர்கள், கடைசியாக தேவதூதர்கள் பற்றி தியானித்தோம். வரும் இதழில் மற்றும் ஒரு பாடத்தில் சந்திப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!





## புதிய ஏற்பாட்டு சபை பெயரில் தெய்வீகமானதாய் இருக்கிறது

### The new Testament Church Is Divine In Name

***- Louis Rushmore***

இயேசுதாமே சபைக்காக மரித்து (அப்.20:28; எபேசி.5:27) அதற்கு தலையாகவும் இருக்கிறார், இதைக்குறித்து எந்த ஒரு நபரும் வேதாகமத்தில் வாசிக்க முடியும், இது பல வேதாகம பெயர்களால்அறியப்படுகிறது. இந்த பெயர்களின் தொடக்கம் தெய்வீகமானதாயிருக்கிறபடியால், இவைகள் எப்பொழுதும் சாத்தியமான விதிவிலக்காக இருக்கிற எளிமையான வார்த்தையாகிய சபை என்பதினாலே இவைகள் தேவனை அல்லது கிறிஸ்துவை மகிமைப்படுத்துகின்றன (மத்.16:16; அப்.2:47) இதே விதமாக அங்கத்தினர்களாயிருக்கிறவர்களுக்கு தெய்வீகமாக அளிக்கப்பட்டிருக்கிற பெயர்களை புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது. ஒருவர் ஒரு முறை கர்த்தருடைய சபையின் வேதாகம பெயர்களையும், அதன் அங்கத்தினர்களையும் அறிந்திருப்பாரேயாகில் இப்பெயர்களெல்லாம், ஒரே காலத்தில் உள்ள சபைகளுக்கு, அதன் அங்கத்தினர்களுக்கும் உரிய பெயர்கள் தெய்வீகமானவைகளா அல்லது மனுஷமுறைமையின்படியான தொடக்கத்தை உடையவைகளா என்பதை ஆராய்ந்து அறிய முடியும்.

**சபைக்கான வேதாகம பெயர்கள்**

மிகவும் கட்டுப்பாடான வகையில் கர்த்தருடைய சபைக்கென்று பெயரும் இல்லை. இதற்குப்பதிலாக கர்த்தருடைய சபையின் பெயர்களுக்காக குறிப்பிடப்பட்டுள்ள வசனக்குறிப்புகள், விளக்கம் அளிக்கின்ற வார்த்தைகளாகவே இருக்கின்றன. இவ்வார்த்தைகள் சபையின் தன்மையை அல்லது சபையுடனே தேவனுக்கு அல்லது இயேசுகிறிஸ்துவுக்கு உள்ள உறவை விளக்குகின்றன.

பொதுவாக பெயர்கள் ஒரு வியாபாரபொருளின் தனிப்பட்ட அடையாளத்தை அடையாளப்படுத்துவதற்காக இருக்கின்றன. ஏதோ ஒரு பொருள் மாத்திரம் இருந்தால், அது அதே பொருளை வேறொரு பொருளில் இருந்து வித்தியாசப்படுத்துகிற பெயர்கள் அவசியமில்லை, அது என்னவாக இருக்கிறதோ, அப்படியே அழைக்கப்படும் அல்லது அதை உருவாக்கியவருடைய சங்கத்துடன் சேர்த்து அழைக்கப்படும். இது ஏறத்தாழ "க்ளீனெகஸ் (Kleenex) மற்றும், "க்யூ-டிப்ஸ்" (Q-Tips) என்பவைகள் முறையே நேர்த்தியாக நெய்யப்பட்ட துணிகளுக்கும், துடைப்பானுக்கும் ஒரே அர்த்தமுள்ள சொற்களாக மாறின. ஒரு சமயத்தில் அவைகளில் ஏதாவதொன்று தங்களுடைய காலத்தில் முதல் நிலையை அல்லது ஆதிக்க நிலையை அடைந்தன. இதே காரணத்துக்காக அமெரிக்க தேசத்தின் சில பகுதிகளில் ஜனங்கள் ஒருவேளை "ஒரு ஆரஞ்சு கோக்" வேண்டும் என்று கேட்கலாம்.

இதேவிதமாக கத்தோலிக்க சபையும், பல பிரிவினை சபைகளும் தோன்றும் முன்பு வேதாகம ரீதியாக விளக்கம் கொடுக்கும் வார்த்தைகள் குழப்பமே இல்லாமல் ஒரே சபையை அடையாளப்படுத்தின. இவ்வாறான அனைத்து வார்த்தைகளும் சபைக்கும், அதை உருவாக்கியவருக்கும் இடையேயான உறவை மட்டுமே விளக்கின. எப்படி இருந்தாலும் நாமகரணத்திற்கே அடையாளமாக இருக்கும் பெயர்கள் ஆயிரக்கணக்கான சபைகளால் தங்களுக்குள்ளே வித்தியாசத்தை காண்பிக்கவும், அவர்களை அறியாமலே வேதாகமத்தின் சபையிலிருந்து வித்தியாசத்தை காட்டவுமே பயன்படுத்தப்படுகின்றன.

ஆகையால், கர்த்தருடைய சபைக்கான வேதாகம பெயர்கள் அதற்காக இடப்பட்ட அடையாளங்கள் அல்ல, ஆனால் நாமகரண சபைகளின் பெயர்கள் அவற்றுக்குரிய அடையாளமான பெயர்களாக இருக்கின்றன. கர்த்தர் தம்முடைய ஒரே ஒரு சபைக்காக மரித்து அதை ஸ்தாபித்தார் (மத்.16:18). பிரிவுக் கூட்ட சபைகளின் பெயர்கள்

வேதாகமத்தின் ஒரே மெய்யான சபையையும் தெளிவான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தையும் அடையாளப்படுத்துவதற்கு பதிலாக ஒரு வகையான மார்க்கத்தின் அடையாளத்திலிருந்து வேறொரு சபையின் அடையாளத்தை, அடையாளம் கண்டு கொள்கிறார்கள்.

கர்த்தருடைய சபை இதுதான் என்று வேதாகமரீதியாக அறிந்து கொள்வதற்காக விளக்கமளிக்கும் வார்த்தைகளில் இவைகளும் உள்ளடங்கியிருக்கின்றன, "என் சபை" (மத்.16:18), "சபை" (அப்.2:47; 8:1), "தேவனுடைய சபை" (1கொரி.1:2) "கிறிஸ்துவின் சபை" (ரோம.16:16), "கிறிஸ்துவின் சரீரம்" (எபே.4:12), ஜீவனுள்ள தேவனுடைய சபை" (1தீமோ.3:15), "தேவனுடைய ஆலயம்" (1கொரி.3;16), "கிறிஸ்துவின் மணவாட்டி" (எபே.5:21-32; வெளி.22:17), "தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யம்" (கொலோ.1:13) மற்றும் "தேவனுடைய வீடு" (1தீமோ.3:15). தெய்வீகமான ஒரு பெயரை தரித்துக் கொள்வது என்பது ஒரு கடினமான காரியம் என்றபோதிலும், வேதாகமத்தின் தெய்வீக அதிகாரமுள்ள பெயரை நினைவில் கொண்டு, அந்த ஓர் மெய்யான தெய்வீக சபையை அடையாளப்படுத்தும் குறியீடு என்பது மாத்திரமே கர்த்தருடைய சபையின் தனிப்பட்ட தன்மையாக இருக்கிறதில்லை.

## சபையின் அங்கத்தினர்களுக்கான வேதாகம பெயர்கள்

இரண்டு ஏற்பாடுகள் முழுவதிலுமாக பல்வேறு விளக்கத்துக்குரிய பெயர்களும் தேவனுடைய ஜனங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிற இத்தகைய அநேக வார்த்தைகள் புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்களில் பல புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற வகையில் கீழ்க்காணும் சொற்களும் அடங்கியிருக்கின்றன; "அவயவங்கள்" (1கொரி.12;27), "சீஷர்கள்" (அப்.6:1; 20:7), "விசுவாசிகள்" (அப்.5:14), "பரிசுத்தவான்கள்" (அப்.9:13; 1கொரி.1:2), "சகோதரர்கள்" (ரோம.8:14), "தேவனுடைய பிள்ளைகள்" (1யோவா.3:12) என்பவைகளுடன் "தேவப்பிரியர்"(ரோம.1:7), தேவனுடைய சுதந்தரர் (ரோம. 8:17) மற்றும் "இராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" (1பேது.2:9) என்பவைகளும் அடங்கியிருக்கின்றன.

தேவனுடைய ஜனங்களுக்கு மற்றுமொரு புதிய ஏற்பாட்டு பெயரும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு உபயோகிக்கபடுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே இச்செய்தி தீர்க்கதரிசனத்திலும் வருகிறது. ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் புறஜாதியார், அந்த ராஜ்யத்திற்குள்ளும் இருந்து அதன் ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவர்களா யிருப்பார்கள், சகல ஜாதியாரும் கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் அழைக்கப்படுவார்கள் (ஏசா.62:1,2; 56:5). கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் சபைக்குட்படுத்தப்பட்ட பின்பு தேவனுடைய ஜனங்களுக்கு **கிறிஸ்தவன்** என்ற புதிய நாமம் அளிக்கப்பட்டது (அப்.11:26). இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் இன்னும் கூடுதலாக இரண்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (அப்.26:28; 1பேது.4:16), கிறிஸ்தவன் என்ற இவ்வார்த்தை தனித்தன்மை உடையதாக ஒருவர் தன்னுடைய மீட்பரை சேவித்து இடைவிடாமல், கிறிஸ்துவை ஞாபக மூட்டுகிறவராக இருக்கிறார் என்பதை விளக்குகிறது.

## முடிவுரை

கணக்கு ஒப்புவிக்க வேண்டிய ஒவ்வொரு ஆத்துமாவும் ஒரு கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க, கர்த்தருடைய தெய்வீகமான சபையில் உள்ளடங்கி இருந்து பாடுபட வேண்டும். பிரிவினை சபைகளின் பெயர்கள் மனுஷீகத்தில் தொடங்கி தெய்வீகமான கிறிஸ்தவன் என்ற வார்த்தையை குழப்புகிறவைகளாயிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் என்று தனிப்பட்ட அடையாள பெயர் எதுவும் இல்லை. ஒருவர், ஒன்று ஒரு கிறிஸ்தவராக மாத்திரம் இருக்கிறார் அல்லது அவர் ஒரு உண்மையான கிறிஸ்தவராக இல்லை!

பெண்கள் பகுதி



## தேவன் ஏன் எனக்கு இதைச் செய்தார்? -Betty
## *Why Did God Do This to Me?*

சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடி வந்தது; அந்தச் செல்வ நாட்களின் சீர் இப்போதிருந்தால் நலமாயிருக்கும் (யோபு29:2-6).

ஆகையால் இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று; உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது. இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது.

‘‘உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்;.... என்மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.... நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் இருதயம் குழம்பிற்று அமராதிருக்கிறது. உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது. வெயில் படாதிருந்தும், நான் கறுகறுத்துத் திரிகிறேன்; நான் சபையில் எழுந்திருந்து உதவிக்காக அலறுகிறேன் (யோபு30:16,17; 20,21:26-28).

‘‘மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும். அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ? (யோபு31:3,4).

‘‘என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என்பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்.... நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் (தேவன்) என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்; என் ஈரலைத் தப்பவிடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார்''... (யோபு16:9,12-14).

‘‘என்னுடைய கண்கள் தேவனிடத்தில் அழுகிறது. ஆ; ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்!

‘‘குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராதவழியே போவேன். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது’’ (யோபு16:21,22;17:1).

மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

### தேவ அன்பு - The Love of God

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தின் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்தில் இருக்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கரை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி *TWOC NO.3* அக்டோபர் 2024**

வாசகருக்கான நற்செய்தி

1. "வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவின் ஆவி அதுவே" என ஆசிரியுரையில் எந்த ஆவியைக்குறித்து குறிப்பிடப்படுகிறது?
2. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற எந்நாளிலே கூடிவந்தார்கள் என ஜே.சி.சோட் விளக்குகிறார்?
3. கர்த்தருடைய ஞாபகபுஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது என்று எந்த தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார்?
4. சாத்தானும் யாருடைய வேஷத்தைத் தரித்துக்கொள்ளுவானே என்று குறிப்பிடப்பட்டுள்ளது?
5. தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யம் எதைக் குறிக்கிறது?
6. கிறிஸ்துவின் அன்பு செயல்படும் அன்பு என யாருடைய செய்தியில் வாசிக்கிறோம்?
7. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று யாருடைய செய்தியில் படிக்கிறோம்?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம் மாதம் 25 -ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும். உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் இம்மாத இறுதியில் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனி தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி. ஆசிரியர்.

*நரகத்தில் காற்று இல்லை... ஏனென்றால்*
*தேவன் ஒரு ஜீவ சுவாசம்*
*நரகத்தில் சமாதானம் இல்லை... ஏனென்றால்*
*தேவனே சமாதானப் பிரபு*
*நரகத்தில் ஆறுதல் இல்லை... ஏனென்றால்*
*தேவனே ஆறுதல் அளிப்பவர்*
*நரகத்தில் அன்பு இல்லை... ஏனென்றால்*
*தேவன் அன்புள்ளவர்*
*நரகம் இருள் நிறைந்த இடம்... ஏனென்றால்*
*தேவனே ஒளியானவர்*




*நீங்கள் அங்கே செல்லவேண்டியதில்லை!*

*ஆனால் அதிலிருந்து தப்ப ஒரே ஒரு வழி மட்டுமே இருக்கிறது, அது இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உள்ள இரட்சிப்பின் மூலம்.*



*There`s no air in hell... because*
*God is a breath of life*
*There`s no peace in hell... because*
*God is the Prince of Peace*
*There`s no comfort in hell... because*
*God is the comforter.*
*There`s no darkness... because*
*God is the light*

*You don`t have to go there!*

*But there is only way to escape it, and that is through salvation in the name of Jesus Christ*

பெண்கள் பகுதி

# பெண்ணாய் பிறந்தவளே!

# O! Ye Who Born As A Woman

J.GloryArjunan



அன்பான சகோதரிகளே, உங்கள் யாவருக்கும் என்னுடைய உளமார்ந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் டிசம்பர் 25-ல் கிறிஸ்துமஸ் விழாவினை குதுகூலத்துடன் கொண்டாடுவார்கள், சிலர் கிறிஸ்துமஸ் விழாவினை கொண்டாடமாட்டார்கள். எதுவாயிருப்பினும் "கிறிஸ்து இயேசு" இவ்வுலகில் பிறந்தது உண்மை. அதுவும் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பார் என்ற முன்னறிவிப்பின்படியே பிறந்தார். இப்படிக் கூறியதும் முப்பத்து முக்கோடி தெய்வங்களை பலரூபத்தில் வணங்குகிறவர்கள் தாங்கள் வணங்கும் சிலவற்றுடன் இயேசுவின் பிறப்பினையும் ஒப்பிட்டுப் பேச ஆரம்பித்து விடுவர். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பரிசுத்தமுள்ள தேவனுடைய குமாரன் என்னப்படுவார். லூக்கா1:35-ல் "தேவதூதன் அவளுக்குப் (மரியாளுக்கு) பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்ற முன்னறிவிப்பின்படி பிறந்தார். இது ஒரு கட்டுக்கதையல்ல. இது வரலாற்று பூர்வமான உண்மையாகும்.

தேவனுடைய குமாரனாகிய பரிசுத்தமுள்ள இயேசுகிறிஸ்து இவ்வுலகில் பிறந்ததின் நோக்கமென்ன? கிறிஸ்மஸ் பண்டிகையினை கொண்டாடி புத்தாடை அணிந்து மகிழுந்து களிகூர்ந்து, ஏதோ சில நன்மைகளை சிலருக்கு செய்து திருப்தியடைகின்ற அன்பு சகோதரிகளே, என்றாவது ஒரு நாள் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் பிறந்ததின் நோக்கத்தை சிந்தித்து பார்த்ததுண்டா? அவரது பிறப்பு ஓர் நற்செய்தி என்பதை சிந்தித்ததுண்டா? "தேவதூதன் அவர்களை (மேய்ப்பர்களை) நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, **எல்லா ஜனத்துக்கும்** (உலகிலுள்ள அனைவருக்கும்) மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் **இரட்சகர்** உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2:11) என்றான். எதற்காக பிறந்தார்? உலகிலுள்ள எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை நாம் பெற்று அனுபவிக்கும்படி பிறந்தார். இந்த சந்தோஷம் நித்தியமானது. அநித்தியமான சந்தோஷத்தை தேடி அலையும் ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் இயேசுவின் பிறப்பைப் பற்றி நாம் கூற வேண்டாமா?

அதுமாத்திரமல்ல அவரது பிறப்பினை "உன்னதத்திலிருக்கிற **தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும்**

உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்" (லூக்.2:14). இவ்வாறு துதித்தவர்கள் யார்? பரமசேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி துதித்தார்கள். என்ன அற்புதம்! எனக்கன்பான சகோதரிகளே, இதையறியாது என் வீட்டில் சந்தோஷம் இல்லை, சமாதானம் இல்லை, குடும்பத்தில் பிள்ளைகள் கீழ்ப்படிவதில்லை மிகுந்த வேதனையுடன் காலத்தைக் கழிக்கிறேன் என்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இந்த கண்ணீர் வாழ்வுக்குக் காரணம் பெண்களாகிய நாமே! கிறிஸ்துவின் பிறப்பு எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தி! அப்படியானால் இப்பெருமான் உன் உள்ளத்தில் பிறக்கவேண்டும். இன்றும் இயேசுவை ஒரு குழந்தையாகவே பார்த்துக் கொண்டு அவரது பிறப்பின் நோக்கம் அறியாமல் இருப்பாயானால் நீ உள்ளான சந்தோஷத்தைப் பெறமுடியாது.

மேலும் பரம சேனையின் தூதர்கள் அவரது பிறப்பினிமித்தம் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்" என்ற வேதவாக்கியத்தை வாசித்தோம் இது எப்பேர்பட்ட ஆசீர்வாதம்! பூமியிலே சமாதானம் என்றால் என்ன? பூமியிலே வாழும் நமக்குள் சமாதானம் இருக்கவேண்டும். மனுஷர்மேல் பிரியம் வைக்கும்படி அவர் பிறந்தார். அப்படியானால் நம்மேல் தேவன் பிரியம் வைக்கச் சித்தமாயிருக்கும் போது நாம் ஏன் கவலைப்படவேண்டும். தேவன் நம்மேல் பிரியம் கொள்ள விரும்பும்போது நீங்கள் உலகம் மற்றும் மாம்சகாரியங்கள் மேல் பிரியம் கொள்ள விரும்பினால் நிச்சயம் தேவன் கொடுக்கும் சமாதானத்தை பெறமுடியாது. தேவன் மனுஷனை எவ்வளவாய் நேசிக்கிறார்! தேவனுக்கு மகிமையை செலுத்துவோம்.

இன்னும் அவரது பிறப்பினை தியானிப்போமென்றால், "...இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்.1:23). தேவன் நம்மோடிருக்கும்போது கவலை, பிரச்சனை, வேதனை, இன்னும் பல்வேறு தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைக் கொண்டுவருகிற பிசாசுக்கு நம்மிடத்தில் என்ன வேலை! பிசாசு இயேசு கிறிஸ்துவை நோக்கி "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்" (மத்.4:9) "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான்" (மத்.4:10). இப்படி தேவன் நம்மோடிருக்கும் போது அவரது வசனத்தைக் கொண்டு நாமும் பிசாசை ஜெயிக்கலாம். பிசாசை வணங்குகிறவர்கள் இவ்வசனத்தின்படி இவ்வுலக ஆசீர்வாதங்களால் செழித்துக் காணப்படுகிறார்கள். பொதுவாக இன்றும்கூட உலகப்பொருட்களைப் பார்த்து பெண்கள் மயங்கி அதை வாங்க வேண்டும், இதை வாங்க வேண்டும்,

இந்தப்பொருளை வாங்கினால் வெவ்வேறு இலவசங்கள் கிடைக்கிறது என்று தங்கள் நிலைமையை மறந்து பிசாசுக்கு இடங்கொடுத்து வீட்டில் பிரச்சனையை கொண்டுவருகின்றனர். அன்பு சகோதரியே பிசாசுக்கு இடங்கொடாதிரு.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இன்னொரு மாபெரும் நற்செய்தியைக் கொண்டுவருகிறது. "...கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2;11) ஆம். இயேசு கிறிஸ்து ஜனங்களை பாவங்களிலிருந்து இரட்சிக்கும் இரட்சகராக பிறந்தவர். இந்த இரட்சகர் உலகத்திற்கு வரவில்லை என்றால் எல்லா ஜனங்களுக்கும் பாவத்திலிருந்து விடுதலையே கிடைத்திருக்காது. உண்மையிலேயே அவர் இம்மைக்குரிய ஆசீர்வாதத்தை மட்டும் கொடுக்க இவ்வுலகத்திற்கு வரவில்லை. ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும், அது பாவத்தினின்றும் அழிவினின்றும் காக்கப்பட்டு என்றென்றும் இயேசுவோடுகூட பரலோகத்தின் சந்தோஷத்தைப் பெறவேண்டுமென்று இயேசு நமக்காக இரட்சகராகப் பிறந்தார். அவருடைய பிறப்பின் மகத்துவத்தை அறியாமல் உலக ஜனங்களைப்போல உண்ணவும், உடுக்கவும், களியாட்டுகளில் ஈடுபட்டு அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசமில்லாமல் வாழக்கூடாது. நாம் பிரித்தெடுக்கப்பட்ட சந்ததியாயிருக்கிறோம் என வேதம் கூறுகிறது. பிரித்தெடுக்கப்பட்ட சந்ததியாகிய நாம் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டும். சங்கீதம் 1;1-2 "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்கரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" எனக் காண்கிறோம். அவ்விதமாக நடந்து உங்களை துன்மார்க்கத்திற்கு விலக்கி காத்துக்கொள்ளுங்கள்.

மேலும், பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தது போல நாமும் துதிப்போமாக! கிறிஸ்து இயேசுவின் பிறப்பின் நற்செய்தி உலகிற்கு கிடைத்த மாபெரும் நற்செய்தி. இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியை அந்நாட்களில் இருந்த பெண்கள் தீவிரமாக சீஷர்களுக்கு அறிவித்தனர். பாவிகளை இரட்சிக்க பிறந்த இயேசுவின் பிறப்பின் செய்தியையும் நாமும் சொல்லியாகவேண்டும்.

## நடப்புச் செய்திகள்

■ ஆசியாவிலேயே பணக்கார கிராமம் என்ற அந்தஸ்தை குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள மாதாபூர் என்ற கிராமம் பெற்றுள்ளது.

■ சவுதி அரேபியாவின் மெக்கா நகரில் உள்ள கடிகார டவரை மின்னல் தாக்கியது

■ அமெரிக்காவுடன் இந்தியா 73K SiG அசால்ட் ரைஃபிள்கள் வாங்க 834 கோடி ஒப்பந்தம் செய்துள்ளது.

நன்றி - NewsPoint

# உண்மையான சபை தோன்றிய வரலாறும் பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்



## உண்மையான திருச்சபை

**"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" மத்தேயு 16:18**

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| **கிறிஸ்துவின் சபை** | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

## பிரிவினை சபைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லுத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டாம் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டி.ரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்.............................. | | | |

**"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்ற, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்" என்றார் இயேசு**

**(மத்தேயு 15:9)**



சிறுவர் பகுதி

# இரண்டுவிசை தரிசனம்

வேத பகுதி: 1இராஜாக்கள் 11:9

**அ**ன்பான தம்பி தங்கைகளே சாலொமோன் ராஜாவை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர்தான் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டினார். அவர் இந்த ஆலயத்தை 7 வருஷத்தில் கட்டிமுடித்தார். அவர் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் 40 வருஷம் அரசாண்டார். 13 வருஷத்தில் அரண்மனையையும் கட்டிமுடித்தார். 3000 நீதிமொழிகளையும், 1005 பாட்டுகளையும் எழுதினார். அவருக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்.



ஆனால், சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால், கர்த்தர் அவன்மேல் கோபமானார். அன்பான பிள்ளைகளே, இந்த சாலொமோனை கர்த்தர் இப்படி எச்சரித்திருந்தும் வழிவிலகிபோனான். இவனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்து, அத்தோடு செல்வத்தையும் கொடுத்திருந்தார். இவனோ ஒன்றுக்கும் உதவாத விக்கிரகத்தை பின்பற்றி சோரம்போனான். நீங்களும் இவனைப்போல போய்விடாதபடி கர்த்தருக்குள் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்**

“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்”

( யாத்திராகமம் 20:3 )

## வேத அறிவுப் போட்டி எண்: 290

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எந்த ஆசாரியனுடைய குமாரனை அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடுபண்ணி அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்?
2. ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்ற மந்திரி யார்?
3. மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே எது அகப்பட்டது?
4. நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக என்னவானார்?
5. எங்கள் பிதாக்களாகிய அவர்களோ அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாதே போனார்கள் என்று யாருடைய நடபடிகளில் வாசிக்கிறோம்?
6. நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. ராஜாவின் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்ட எஸ்தருக்கு எத்தனை தாதிமார்களை நியமித்தார்கள்?
8. உலகத்திலே எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் அறிந்திருக்கிறேன் என்றவன் யார்?
10. மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள் வரைக்கும் எது அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறது?

## வேதாகம ஆய்வு... 74

### தீத்து - Titus

1. கிரேக்கன் – 2கொரி.2:3
2. உத்தமகுமாரன் – தீத்து 1:1
3. எதிர்பாராதவன் – 2கொரி.12:18
4. அவனால் ஆறுதலடைந்தார்கள் – 2கொ.9:6
5. கொரிந்து சபையில் தீத்துவின் ஊழியம் – அப்.15:28



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

October 2024







ஒவ்வொரு மாதமும் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழை ஆயத்தம் செய்யும் சகோதர, சகோதரிகளை உற்சாகப்படுத்த வைகை டேம் பிக்னிக் இடம்: தேனி மாவட்டம்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



நைல் நதி

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

love God
love people
be a servant

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan